# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 194/நகராட்சி/2019**
**நாள் : 05/02/2020**

**திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,**
**காயல் பட்டணம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**காயல்பட்டணம்.** – **எதிர் மனுதாரர்**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சிவன் கோவில் தெரு, 168/B-5 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் அவர்களின் 19.11.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 194/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப் படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சிவன் கோவில் தெரு, 168/B-5 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் என்பவர் தான் வசிக்கும் சிவன் கோவில் தெருவில் தெருவிளக்குகள் அமைக்கப்படும் என காயல்பட்டணம் நகராட்சி பதில் அளித்த நிலையில், இரண்டு ஆண்டுகள் கடந்தும் தெருவிளக்குகள் அமைக்கப்படவில்லை எனத் தெரிவித்து இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து மனுதாரரிடம் 04.02.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சிவன்கோவில் தெருவில் தெருவிளக்குகள் அமைப்பது சம்பந்தமாக நகராட்சிக்கு முறையீடு செய்து இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தெருவிளக்குகள் அமைக்கப்படாமல் அலட்சியப்படுத்துவதாக விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரர் குடியிருக்கும் சிவன்கோயில் தெருவில் தெருவிளக்குகள் அமைப்பது சம்பந்தமான கோரிக்கை மனு 09.10.2017 நாளன்று மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கோரிக்கை மனுவிற்கு நகராட்சி ஆணையாளரிடம் விளக்கம் பெற்று உரிய பதிலினை 21.11.2017 அன்று மனுதாரருக்கு மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் தமிழக அரசால் LED விளக்குகள் அமைக்கும் பணி நடவடிக்கையில் உள்ளதால் அரசு ஆணை பெற்றவுடன் வரன்முறைப்படுத்தப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் தெருவிளக்குகள் வழங்கப்படும் என மாவட்ட

ஆட்சியரின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, LED தெருவிளக்குகள் அமைப்பது சம்பந்தமாக அரசு ஆணை பெறப்பட்டிருப்பின் காயல்பட்டணம் நகராட்சியின் வரன்முறைப்படுத்தப்பட்ட பகுதிகள் அனைத்திற்கும் தாமதமின்றி தெருவிளக்குகள் அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என காயல்பட்டணம் நகராட்சியின் ஆணையாளருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **5**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. **திரு எம். மெய்தீன் அப்துல் காதர்,**
   **எண்.168/B-5, சிவன் கோவில் தெரு,**
   **காயல் பட்டணம் – 628 204.**
   **தூத்துக்குடி மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையாளர்,**
   **காயல்பட்டணம்,**
   **தூத்துக்குடி மாவட்டம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**